நெல்லை
மாலை
முரசு




# புத்தாண்டு

## பலன்கள்

# 2012 புத்தாண்டு பலன்கள்

கணித்தவர்:- ஜோதிடர் நெல்லை சங்கர சுப்பிரமணியன்



**2012** புத்தாண்டு பொதுப்பலன் குரு, சனி, ராகு, கேது கிரகங்களின் நிலைகளை வைத்து எழுதப்பட்டது. பொதுப்பலன்படி இந்தாண்டு தங்கம் விலை குறையும்.

சனி உச்சம் பெற்று இருப்பதால் இரும்பு விலை அதிகரிக்கும். வாகனங்கள் விலை உயரும். உலக அளவில் அமெரிக்க டாலர் மதிப்பு குறையும். வெள்ளப்பெருக்கால் சில நாடுகளுக்கு பாதிப்பு ஏற்படும்.

ராகு உச்சம் பெற்றிருப்பதால் எலக்ட்ரானிக்ஸ் பொருட்கள் விலை அதிகரிக்கும். போலி பொருட்கள் வெளிச்சத்துக்கு வரும். விவசாயம் மேன்மையடையும். மக்கள் சக்தி அதிகரிக்கும்.

ஒரு ராசியில் 45 நாட்கள் இருக்க வேண்டிய செவ்வாய் 5 மாதங்களுக்கும் மேல் ஒரே ராசியில் இருப்பதால் பல நாடுகளில் யுத்தங்கள் ஏற்படலாம். இந்தியாவுக்கு எந்தவித பாதிப்பும் இல்லை.

## மேஷம்

தன்னம்பிக்கையும், விடாமுயற்சி கொண்ட மேஷராசி அன்பர்களே

(அசுவினி, பரணி, கிருத்திகை 1–ஆம் பாதம்)



இந்த ஆண்டு முழுவதும் உங்கள் ஜென்ம ராசியிலும், 2ஆம் இடத்திலுமாகக் குரு பகவான் சஞ்சாரத்தை மேற்கொள்ளுவார். அவர் 2ஆம் இடம் என்னும் தனஸ்தானத்தில் சஞ்சரிக்கின்ற காலக்கட்டத்தில் (அதாவது 17.5.2012க்கு மேல்) உங்களுக்கு அநேக நற்பலன்களை வாரி வழங்குவார்.

சனி பகவானோ இந்த ஆண்டில் பெரும் பகுதி உங்கள் இராசிக்கு 7ஆம் இடத்தில் பவனி உள்ளது. இது அவ்வளவு சிறப்புக்கு அல்ல. ராகுகேதுக்களின் சஞ்சாரமும் குறிப்பிடத் தகுந்த இடத்தில் இல்லை. ஆக, இந்த வருடம் பல கிரகங்களில் உங்களுக்கு பெருமளவு கைகொடுத்து உதவுபவர் குருபகவான்தான். அவர் ஒருவரின் துணை உங்களுக்கு மட்டுமே போதும், நீங்கள் இந்த 2012ஆம் வருடத்தில் சாதனைகள் செய்துவிடுவீர்கள். இந்த ஆண்டு குருபகவான் உங்களுக்கு நன்மைகள் பலவற்றைக் கொடுக்கவே செய்வார். அவப்பெயர் நீங்கிவிடும். அபாண்டப் பழி போய் ஒழியும். தவப் பயன் கிடைத்துவிடும். தடைகள் எல்லாம் தகர்ந்து விடும். தீர்த்த யாத்திரைக்குச் சென்று வருவீர்கள். மூர்த்திகள் பலரை வணங்கிச் சேர்த்திடுவீர் புண்ணியத்தை! கீர்த்தி பெருகும். கெடுதலெல்லாம் விலகும்! வார்த்தை ஜாலத்தால் வசப்படுத்துவீர்! சேமிப்பு அதிகரிக்கும். பாதிப்பு ஏதுமின்றிப் பாக்கியங்கள் பெற்றிடுவீர். எண்ணம்போல் திருமணம்! இஷ்டம் போல் மணவாழ்வு வண்ணமாய் வாழ்வு மாறும். வசதி பல கூடிவிடும்.

பணப்புழக்கம் இல்லாமல் மனப்புழுக்கம் கொண்டிருந்தவர்களுக்கெல்லாம் பையிலும் கையிலும் பணம் புழங்கும். வீடுமனை வாங்கிடலாம். வெற்றிகளைக் குவித்திடலாம். கால்நடை லாபம் தரும். மகத்தான யோகம் வரும். மதிப்பு உயர்ந்துவிடும். மரியாதை கூடி விடும். கொதிப்பு அடங்கிவிடும். குதூகலங்கள் நிரம்ப வரும். இப்படிப்பட்ட பல்வேறு நற்பலன்களை இந்த ஆண்டு நீங்கள் எதிர்பார்க்கலாம்.

சனி பகவான் வக்ர பெயர்ச்சியில் 6ஆம் இடத்தில் பவனி வரும் வேளையிலும் நீங்கள் அநேக நற்பலன்களை அடையமுடியும் என்பதால் ஒட்டுமொத்தமாக நற்பலன்களையே அதிகம் இந்த ஆண்டு உங்களுக்கு கிடைக்கும்.

இந்த ஆண்டு சனிபகவான் ஏழாமிடத்தில் சஞ்சரிப்பதாலும், ராகுகேதுக்களும் மோசமான சஞ்சாரத்தை மேற்கொண்டிருப்பதாலும் சில வகையான கெடுபலன்களும் நடைபெற வாய்ப்புண்டு. எதிர்பாராச் செலவுகளால் இன்னல்பட நேர்ந்திடலாம். அதிகார வர்க்கத்தால் அல்லல் வந்து சேர்ந்திடலாம். சதிகாரர் சூழ்ச்சியால் சங்கடங்கள் தோன்றிடலாம். மனைவியோடு மனஸ்தாபம் நேரிடலாம். மனைவிக்கு உடல்நலம் பாதிக்கலாம். மனைவி வழியினரால் மனவேதனை ஏற்படலாம். தேவையற்ற பணிமாற்றம். அவசியமற்ற இடமாற்றம் என்று அல்லல்பட நேரிடலாம். மேலதிகாரிகளிடம் கருத்து வேறுபாடு வந்திடலாம். கீழே இருப்பவர்கள் கேவலமாய்ப் பேசிடலாம்.

வாருங்கள் ஸ்வாமி, இனி, மாதக் கோள்களான சூரியன், செவ்வாய், புதன், சுக்கிரன் ஆகியோரின் கையிருப்பை ஒவ்வொரு மாத வாரியாகக் காண்போம். அவர்கள் ஒருவேளை வருடக் கோள்களைவிட அதிக நன்மைகளை வாரி வழங்கக்கூடும் வழங்குவார்களா? வாருங்கள். பார்ப்போம்.

**ஜனவரி மாதப் பலன்கள்:** இந்த முதல் மாதமே முத்தான மாதமென்று மொழிகின்றன கிரகங்கள். 13ஆம் தேதிக்கு மேல் சூரியன் 10ஆம் இடத்தில் சஞ்சரிப்பதும், சுக்கிரன் 10, 11ல் உலவுவதும், புதனும் சாதகமாக இருப்பது இந்த வருடத்தை அட்டகாசமாக ஆரம்பிக்க உங்களுக்கு உதவும். முதல் அடியை சரியாக எடுத்துவைத்து விடுவீர்கள் என்பதால் அடுத்தடுத்த மாதங்களை அழகாக்க சமாளித்துவிடுவீர்கள் என்றெ எனக்குத் தோன்றுகிறது. இந்த முதல் மாதத்தில் வசந்தம் உங்கள் வாசல்வரும். வாய்ப்புக் கதவைத் தட்டும். கும்பிடப் போன தெய்வம் குறுக்கே வரும். உங்கள் காட்டில் அடைமழை பொழியும்.

**பிப்ரவரி மாதப் பலன்கள்:** இந்த வருடத்தின் உச்சமான மாதம் இதுதான் என்று ஜீவனஸ்தானத்திலும் லாப ஸ்தானத்திலும் உலாவரும் சூரியன் சொல்லுகின்றார். தொழிலிலே ஏற்றம் உண்டு. வாழ்வில் மாற்றம் உண்டு. வழி கிடைத்துவிடும். வருத்தம் போய்மறையும். வாழ்நாளின்